IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No 383/2009
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.40 PM.

வா.சா. 1சாட்சி கொண்டப்பன் த.பெ. இராமசாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 24.09.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அ.வ.எண்.383/2009 என்ற வழக்கு சொத்து எனக்கு பாத்தியம் என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண். 408/3 என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 , வா.சா.ஆ3 ஆவணங்களில் உள்ள சொத்தும் சர்வே எண். 408/3 என்றால் சரிதான்.

2. சர்வே எண். 408/3 க்குதான் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். ஆட்சேபணை மனு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. அ.வ.எண். 499/2009 வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தாவா இடத்தை அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 2 நீதிமன்ற ஆணையர்களும் வழக்கு

தரப்பினர்களின் ஆவணங்களின் அடிப்படையில் அளவீடு செய்தார்கள் என்றால் சரிதான். ஆனால் 3 நீதிமன்ற ஆணையர்கள் அளந்தார்கள்.

4. 3 நீதிமன்ற ஆணையர்கள் அளக்கவில்லை 2 நீதிமன்ற ஆணையர்கள்தான் அளந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் சர்வே எண். 248/32 தெரு என்று அரசாங்க ஆவணத்திலும் உள்ளது என்றால் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண். 248/32 ஐ பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

5. எனது ஆவணத்தில் உள்ள சர்வே எண் வேறு அரசாங்கத்தில் உள்ள சர்வே எண் வேறு என்றால் சரியல்ல. எல்லா உண்மைகளும் தெரியும் தெரிந்துகொண்டே தவறு என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண். 383/2009 ல் உள்ள வழக்கு சொத்துக்கும் நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

6. நான் விளம்புகை பரிகாரம் கேட்பதற்கு அடிப்படை ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நீதிமன்ற கட்டணம் செலுத்தியது தவறு என்றாலும் சரியல்ல. முதன் முதலில் வழக்கு தாக்கல் செய்யும் போது தாவா சொத்து சர்வே எண் கூறாமலேயே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது பத்திரத்தில் உள்ள அடியளவுகளும், வழக்கு சொத்தில் உள்ள அடியளவுகளும் வெவ்வேறானவை என்றாலும் நான்குமால்களும் தவறானவை என்றாலும் சரியல்ல.

7. பழனிக்குமார், இராமசாமி என்பவரிடம் இருந்துதான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வீட்டு வரி இரசீது எனக்கு கிரையம் கொடுத்த நபர்களின் பெயர் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த நபர்கள் பெயரில் வீட்டு வரி இரசீது இல்லாத நிலையில் நான் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளது தவறு என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்தவர்கள் என்ன அனுபவம் செய்தார்களோ, அதே அளவுகளை அனுபவம் செய்ய எனக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

8. நான் சர்வே எண். 408/3க்குதான் விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேன் என்றாலும் சர்வே எண். 248/32 க்கு கேட்கவில்லை என்றாலும் 2 சர்வே எண்களும் வெவ்வேறானவை என்றாலும் சரியல்ல. 2 சர்வே எண்களும் ஒன்றுதான் என்பதற்குரிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். ஆணையர் அறிக்கையின் சர்வேயர் அறிக்கையின் புல எண். 248/32 பழைய சர்வே எண். 237/3பா என்று உள்ளது என்றால் இந்த சர்வே எண்ணும் பின்னிட்டு மாற்றப்பட்டது. மேற்படி சர்வே எண் மாற்றப்பட்டதாக ஆவணங்களின்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. முருகன், ராவுத்தன், முத்துவேல் மற்றும் ஆறுமுகம் என்ற அம்மாவாசி ஆகியோர்கள் உடன் பிறந்தவர்களா என்றால் முருகன் மட்டும் உடன் பிறந்தவர் அல்ல. முத்துவேல் வீட்டிற்கு மேற்கு பக்கம் வாசல் என்றால் சரிதான். அதனை தொடர்தார்போல் ஆறுமுகம் என்ற அம்மாவாசி கிழக்கு பக்கம் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அறுமுகம் வீட்டிற்கு

கிழக்கு பக்கம் வாசல் என்றால் சரிதான். ஆறுமுகம் என்ற அம்மாவாசி வீட்டிற்கு வடக்கு பக்கம் இராவுத்தன் வீடு உள்ளது என்றால் சரிதான்.

10. மேற்படி இரவுத்தன் வீட்டு வாசல் கிழக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)

முடிவடையும் நேரம்: 01.10 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.24 10:27:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.